அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல : 13/2001

எனது இல : பீ/1/3
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.07.04

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைர்கள் யாவர்க்கும்.

**2001 ஆண்டு 2 ஆம் இலக்க தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திருத்தச் சட்டம் - அரச பெண் அலுவலர்களின் விருப்பம் தெரிவிப்பு**

1983 ஆம் ஆண்டு 231 ஆம் இலக்க, 1985 ஆம் ஆண்டு 291 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு விருப்பம் தெரிவிக்க முடியாது போன பெண் அலுவலர்களுக்கு மேற்படி சட்டத்தின் மூலம் மீண்டும் விருப்பத்தை தெரிவிக்க சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

02. விருப்பத்தினை தெரிவிக்க இயன்ற திகதி 2002.02.22 ஆதல் வேண்டும் என அரசு விதித்துரைத்துள்ளது.

03. மேலே முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின்படி விருப்பம் தெரிவித்து அங்கத்தவராகாதவர்களும் 1983.08.01 திகதிக்கு முன் ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் நியமனம் செய்யப்பட்டு அன்று சேவையாற்றியவர்களுமான பெண் அலுவலர்களுக்கு இச்சட்டப்படி 2002.02.22 ஆந் திகதிக்கு முன் தமது விருப்பத்தை தெரிவிக்க முடியும்.

04. 1. தற்போது சேவையில் உள்ளவர்களும் விருப்புத் தெரிவிக்க விரும்புகின்றவர்களுமான பெண் அலுவலர்கள் தமது திணைக்கள தலைவரிடம் பின்னிணைப்பு ஒன்றின்படி விருப்பு தெரிவிப்பு கடிதங்களை 03 பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டியதுடன் திணைக்கள தலைவர் அவ் விருப்புக் கூற்றுகளை சான்றுபடுத்தி ஒரு பிரதியை பேர்வழிக்கோவையில் இணைத்து வைக்க வேண்டும். ஒரு பிரதியை சம்பளப் பிரிவில் ஒப்படைத்தல் வேண்டும். மற்ற பிரதியை ஓய்வூதிய பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விருப்பத்தை தெரிவித்த திகதிக்கு அடுத்த மாதத்திலிருந்து மாதாந்த சம்பளத்தில் உதவுதொகை அறவிடுதல் வேண்டும்.

1983.08.01 ஆந் திகதியிலிருந்து விருப்பம் தெரிவித்த திகதி வரையிலான நிலுவை உதவு தொகையை 4% சதவீத கூட்டுவட்டியுடன் 180 தவணைக் கட்டணங்களில் சம்பளத்தில்/ஓய்வூதியச் சம்பளத்தில் அறவிடுதல் வேண்டும். 1983.08.01 இருந்து சம்பளத்தில் அறவிட வேண்டிய உதவுதொகை நூற்றுக்கு வீதம் இணைப்பு 01 ஆக காட்டப்பட்டுள்ளது. கூட்டுவட்டியை கணிக்க வேண்டிய முறையை இணைப்பு 11 ஆக காட்டப்பட்டுள்ளது. உதவுதொகை மற்றும் கூட்டு வட்டியை கணிப்பது தொடர்பான உதாரணங்கள் இணைப்பு 111 ஆக காட்டப்பட்டுள்ளது.

11. தற்போது ஓய்வூதியம் பெற்றுள்ள விருப்பத்தை தெரிவிப்பதற்கு விரும்பும் பெண் அலுவலர்களும் தமது விருப்பத்தை இறுதியாக சேவையாற்றிய திணைக்கள தலைவரிடம் 03 பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். அவர்களிடமிருந்து 83.08.01 திகதியிலிருந்து ஓய்வுபெற்ற திகதி வரையிலான காலத்திற்குள் செலுத்த வேண்டிய உதவு தொகைகளை 180 தவணைக் கட்டணங்களில் ஓய்வூதியத்திலிருந்து அறவிடுதல் வேண்டும். மேலே 1 இல் குறிப்பிட்டுள்ளபடி அவ்வாறு செலுத்த வேண்டிய நிலுவை தவணைக் கட்டணங்கள் மற்றும் கூட்டுவட்டியை கணித்து 03 பிரதிகளில் ஓய்வூதியம் செலுத்தப்படும் பிரதேச செயலாளருக்கு பின்னிணைப்பு 11 இல் குறிப்பிட்டுள்ள படிவங்களின் மூலம் அறிவிக்க வேண்டும். பிரதேச செயலாளர் அறவிடுதலை குறித்துக் கொண்டதாக சான்றுபடுத்தி 02 பிரதிகளில் திணைக்களத் தலைவருக்கு திருப்பி அனுப்புதல் வேண்டும். திணைக்களத் தலைவர் ஒவ்வொரு பிரதியையும் பெயர் வழிக் கோவையில் உள்ளடக்க வேண்டுமென்பதுடன் மற்ற பிரதியை பின்னிணைப்பு 11 இன் பிரதியுடன் ஓய்வூதியப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

111. மரணித்துவிட்ட பெண் அலுவலர்கள் ஆனவிடத்து அவர்கள் விருப்பத்தை தெரிவிக்காவிட்டாலும், தற்போது மரணித்துள்ளதும் விருப்பம் தெரிவிக்க இடமளித்துள்ளதுமான இறுதி திகதிக்கு முன் மரணித்துவிடும் பெண் அலுவலர்களுக்காக தபுதாரர் அநாதை ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு திருத்தச் சட்டத்தின் மூலம் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சார்பில் விருப்பக் கூற்றை பெறவேண்டிய அவசியம் ஏற்படாதவுடன் பொதுப்படிவம் 86 'அ' வை தபுதாரரைக் கொண்டு அல்லது அநாதைப் பிள்ளைகளின் பொறுப்பாளரைக் கொண்டு கையொப்பமிட்டு நிரந்தர ஓய்வூதிய நியமனக் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி,திருமணச் சான்றிதழ், மரணச்சான்றிதழ், விதவை அநாதை ஓய்வூதிய 16 ஆம் அறிக்கை, வரலாற்றுத்தாள் மற்றும் பொது 55 ஓய்வூதிய விண்ணப்பத்தை தயாரித்து ஓய்வூதிய பணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. சேர்வதற்கு விருப்பம் தெரிவிக்கின்ற பெண் அலுவலர்கள் சார்பில் இயன்ற எல்லா சந்தர்ப்பத்திலும் தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்யத் தேவைப்படும் பொது 86'அ' படிவம் விவாகச் சான்றிதழ், ஓய்வூதியத்துடனான நியமனக் கடித்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், விருப்பக் கூற்று மாதாந்த உதவு தொகை மற்றும் நிலுவையான உதவுதொகையை வட்டியுடன் அறவிடுவதற்கான சான்றிதழ், இணைப்பு 111 இன் உதாரணங்களின்படி நிலுவை கணித்து அட்டவணை பிரதியொன்றையும் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். எனினும் இவ் ஆவணங்கள் சமர்ப்பித்தல் தாமதமாகும் சந்தர்ப்பத்தில் விருப்பக் கூற்றுக்களை மற்றும் சமர்ப்பிக்க முடியும்.

06. மாகாண அரச சேவையில் உள்ளீர்க்கப்பட முன் ஓய்வு பெற்ற அல்லது மரணித்துவிட்ட உள்ளூராட்சி சேவையை சேர்ந்த பெண் அலுவர்கள் தொடர்பில் இச் சுற்றறிக்கை ஏற்புடையதாகாது.

07. அறவிடுதல்களை கணக்கிடுதல் 1/2001 ஆம் ஓய்வூதிய சுற்றறிக்கையின்படி செய்தல் வேண்டும்.

08. 1983.08.01 ஆந் திகதிக்கு முற்பட்ட சேவைக் காலத்திற்காக பின்வருமாறு உதவுதொகை செலுத்தவோ,அறவிடவோ முடியும்.

8. 1. இம்முறைக்காக விருப்பம் தெரிவித்த பெண் அலுவலர்கள் 1983.08.01 ஆந் திகதிக்கு முன் ஓய்வூதியத்துக்காக கணக்கெடுக்க முடிந்த சேவைக்காலத்திற்காக தாங்கள் பெற்ற சம்பளத்தில் (4 %) நூற்றுக்கு நான்கு சதவீத உதவுதொகையை 4% திலான வட்டியுடன் தமது விருப்பப்படி செலுத்த முடியும். அக் கொடுப்பனவுகளை ஒரே முறையில் தாம் விரும்பும் தவணைக் கட்டணங்களால், சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது சம்பளத்தினால் அல்லது ஓய்வு பெற்றபின் மாற்றிய பணிக்கொடையிலோ அல்லது மாதாந்த ஓய்வூதியத்தில் இருந்தோ செலுத்த முடியும்.

11. பெண் அலுவலர் தான் உயிர்வாழும் காலத்திற்குள் அவ்வாறு செலுத்தாத உதவு தொகைகளை அவர் சார்பில் தபுதாரருக்கு அல்லது அநாதை குழந்தைகளுக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியத்திலிருந்து அவர்களின் விருப்பப்படி அறவிடமுடியும்.அவ்வாறு அறவிடப்படாத காலமாயிருப்பின் அவ்வாறு அறவிடாத ஒவ்வொரு மாதத்திற்காக அலுவலருக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியத்திலிருந்து 1/600 வீதம் கழித்துக் கொள்ள முடியும்.

எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,

பிரதிகள்-சகல பிரதேச செயலாளர்களுக்கும்

## பின்னிணைப்பு 1

2001. 13/2001 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி விருப்பம் தெரிவிப்பு, (மூன்று பிரதிகளில் முன்னளிக்க வேண்டும்)

(1) பெண் அலுவலரின் பெயர் :-

(2) பிறந்த திகதி :-

(3) வகிக்கும் பதவி :-

(4) ஓய்வூதியமுடைய பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :-

2001.07.04 ஆம் திகதிய 13/2001 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி................................ ..........................................................................................ஆகிய நான் 2001 ஆண்டு 2 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1983 ஆண்டு 24 ஆம் இலக்க தபுதாரர் அநாதை ஓய்வூதியத் திட்டத்தில் சேர்வதற்கு இத்தால் விருப்பத்தை தெரிவிக்கின்றேன். இவ் விருப்பத்தை இரத்துச் செய்ய முடியாதென்றும் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் மாற்றிக் கொள்ள எனக்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் நான் அறிவேன்.

திகதி:-

................................................................................
பெண் அலுவரின் கையொப்பம்

### திணைக்களத் தலைவரின் உறுதியுரை

மேற்படி பெண் அலுவலர் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய ஒரு பதவி வகிக்கிறார் என்றும் ..................................இலக்க 13/2001 , 2001.07.04 திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி விருப்பம் தெரிவிப்பதற்கு தகைமையுடையவர் என்றும், மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் அலுவலகத்திலுள்ள குறிப்புக்களின்படி சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன்,

திகதி :-

திணைக்களத் தலைவரின்
பரவலாக்கப்பட்ட கூறுத் தலைவரின்
கையொப்பம்.
(பெயர்,பதவியுடனான அலுவலக முத்திரை இடவும்)

எனது இலக்கம் :

செயலாளர்/கணக்காளர்
விதவை அநாதைகள் ஓய்வூதிய அலுவலகம்

முன்னளிக்கப்படுகிறது.

திகதி:-

திணைக்களத் தலைவரின்/
பரவலாக்கப்பட்ட கூறுத் தலைவரின்
கையொப்பம்,
(பெயர், பதவியுடனான அலுவலக முத்திரை இடவும்)

கவனிக்க :- இவ்விருப்பத் தெரிவிப்பின் ஒரு பிரதியை அலுவலரின் தனியார் கோவையில் கோவையிட வேண்டும். ஒரு பிரதியை ஓய்வூதியப் பிரிவுக்கு கையளிக்க வேண்டும்.

## <u>பின்னிணைப்பு 11</u>

(மூன்று பிரதிகளில் முன்னளிக்க வேண்டும்)

எனது இல :-

பிரதேச செயலாளர்,

**<u>2001 ஆண்டு 2 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1983 ஆண்டு 24 ஆம் இலக்க தபுதாரர் அநாதை ஒய்வூதியத் திட்டப்படி அறவிட வேண்டிய நிலுவை உதவுதொகைகளும் கூட்டு வட்டிகளும்.</u>**

கீழே விபரங்கள் குறிப்பிட்டுள்ள ஓய்வுபெற்ற பெண் அலுவலர் 13/2001 ஆம் இலக்க 2001.07.04 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி தபுதாரர் அநாதை ஓய்வூதிய திட்டத்தில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்,

1983,08,01 ஆந் திகதி முதல் அவர் ஓய்வு பெற்ற.................................................... ஆந் திகதி வரை அவரின் சம்பளத்திலிந்து அறவிட வேண்டிய உதவு தொகையினதும் வட்டியினதும் கூட்டு மொத்தம் ............................................. ரூபாவாகும். அத் தொகையை ரூபா (எழுத்தில்)............................................................................................................................ வீதம் ஒரு தவணைக் கட்டணத்தாலும் ரூபா........................................................................... வீதமான 179 தவணைக் கட்டணங்களால் 200,,,,,, ஆண்டு ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, மாதத்திலிருந்து அறவிடுவதற்கு குறித்துக் கொண்டு அது பற்றி எனக்கு அறிவிக்கவும்.

(1) ஓய்வுக்காரரின் பெயர் :-
(2) ஓய்வு பெறற திகதி :-
(3) வகித்த பதவி :-
(4) ஓய்வூதிய இலக்கம் :-
(5) ஓய்வூதியம் பெறும் வங்கி/ அஞ்சல் அலுவலகம் :-

திகதி :-

திணைக்களத் தலைவரின்
கையொப்பம்.

எனது இல:-

.......................................................................
.......................................................................

இல.............................................................. இன் கீழ் ஒய்வுச் சம்பளம் பெறும் திருமதி......................................... இன் ஒய்வுச் சம்பளத்தில் இருந்து 200,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, மாதம் தொடக்கம் 200...................................... மாதம் வரை ரூபா ................................. தவணைக் கட்டணத்தாலும் ரூபா............................ வீதமான 179 தவணைக் கட்டணங்களினாலும் தபுதாரர் அநாதை ஒய்வூதிய உதவு தொகைகளை அறவிட்டு 07.010 வருமானத் தலைப்பில் வரவு வைப்பதற்கு குறித்துக் கொண்டேன் என்பதை சான்றுபடுத்துகின்றேன்.

திகதி :-

பிரதேச செயலாளர்
(பெயர்,பதவியுடனான அலுவலகமுத்திரை இடவும்)

# இணைப்பு 1

## திரட்டிய சம்பளத்தின் பேரில் அறவிட வேண்டிய தபுதாரர் அநாதை ஓய்வூதிய உதவுதொகை சதவீதங்கள் உதவுதொகை அறவிடும் முறை

| | | | | |
|---|---|---|---|---|
| 83.08.01 தொடக்கம் 86.01.01 வரை | – | 8580/= வரை | | 1 1/2% |
| | | 8581/= தொடக்கம் | 15600/= வரை | 3% |
| | | 15601/= தொடக்கம் | மேற்பட்டவை | 4% |
| 86.01.01 தொடக்கம் 87.12.31 வரை | – | 8640/= வரை | | 1 1/2% |
| | | 8641/=தொடக்கம் | 15600/= வரை | 3% |
| | | 15601/= தொடக்கம் | மேற்பட்டவை | 4% |
| 88.01.01 தொடக்கம் 88.12.31 வரை | – | 17280/= வரை | | 1 1/2% |
| | | 17281/= தொடக்கம் | 28800/= வரை | 3% |
| | | 28801/= தொடக்கம் | மேற்பட்டவை | 4% |
| 89.01.01தொடக்கம் 92.12.31 வரை | – | 17280/= வரை | | 3% |
| | | 17281/= தொடக்கம் | 28800/= வரை | 5% |
| | | 28801/= தொடக்கம் | மேற்பட்டவை | 6% |
| 93.01.01தொடக்கம் 96.12.31 வரை | – | 23400/= வரை | | 3% |
| | | 23401/= தொடக்கம் | 35700/= வரை | 5% |
| | | 35701/= தொடக்கம் | மேற்பட்டவை | 6% |
| 97.01.01 தொடக்கம் …………….. | – | 45600/= வரை | | 4% |
| | – | 45601 – தொடக்கம் | 70260 வரை | 6% |
| | – | 70261 தொடக்கம் | மேற்பட்டவை | 7% |